நாள்: 03.11.2025

O.S. No. 81/2022

பி.வா.சா.1

பெயர்: உதயக்குமார், த/பெ. சீனிவாசன்

<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் எந்த புலஎண்ணில் வீடு கட்டியுள்ளேன் என்றால் புலஎண் 82/1B ஆகும். புலஎண் 82/2B யாருக்கு சொந்தமானது என்றால் என் தகப்பனாருக்கு சொந்தமானதாகும். புலஎண் 82/1Bல் எந்த அரசு திட்டத்தின் கீழ் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் பாரத பிரதமர் ஆவாஸ் பிளஸ் திட்டத்தின் கீழ் வீடு கட்டியுள்ளேன். மேற்படி திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு நான் என்னென்ன ஆவணங்களை அரசுக்கு கொடுத்திருந்தேன் என்றால் வீட்டுவரி ரசீது, பட்டா மற்றும் சிட்டா ஆவணங்களை கொடுத்துள்ளேன். மேற்படி புலஎண் 82/1B அரசு திட்டத்தின் கீழ் வீடு கட்ட அனுமதியளிக்க யாரால் கள ஆய்வு செய்யப்பட்டது என்றால் BDO, Engineer மற்றும் Over see Officer ஆகியோர் பார்த்தார். மேற்படி திட்டத்தின் கீழ் அரசால் எவ்வளவு தொகை மற்றும் பொருட்கள் கொடுக்கப்பட்டது என்றால் மூன்று முறை ரூ. 26,000/- ம் ,1 முறை ரூ. 46,000/- மும் 100 மூட்டை சிமெண்ட் வழங்கப்பட்டது. நான் அரசுக்கு அளித்த ஆவணங்கள் சரியாக இருந்த காரணத்தாலேயே எனக்கு புலஎண் 82/1B ல் வீடு கட்ட அனுமதியளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.11.03 18:41:42 +0530